# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 12.03.2026**

**OS No. : 410/2022**

**Dw : 1**

**Name : திரு. சுந்தரவேல்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**5 முதல் 7 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) எனது பெற்றோருக்கு 3 ஆண்களும் ஒரு பெண்ணும் வாரிசுகள் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி எனது சகோதரி என்றால் சரிதான். எனது குடும்பத்தினர் அனைவரும் இந்துக்கள்தான் என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் 33ம் அயிட்ட சொத்தான சர்வே எண். 35/1 எனது தகப்பனார் முத்தையா கரையாளர் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி சொத்து ராமசாமி என்பவருக்கு சொந்தமானது என்பதைகாட்டக்கூடிய ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் என் உடன் பிறந்தவர்கள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமாகும்வரை எங்கள் வீட்டில் தான் இருந்தார். நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். எனது தாயார் என்னுடன்தான் வசித்துவருகிறார். எனது தகப்பனார் உடல்நலமின்றி இருந்த காலக்கட்டத்தில் எனது சகோதரியான வாதி அவரை பார்க்கவருவார் என்றால் சரிதான். 13.04.2010 அன்று பிராது 1ம் தபசில் சொத்தை எனது தகப்பனார் எனது சகோதரியான வாதிக்கு பதிவுசெய்யப்பட்ட நன்கொடை ஆவணம் எழுதிவைத்துவிட்டார்

என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன். அதில் கண்டுள்ள சொத்து காலிமனை என்றால் சரிதான். 2010 க்கு பின்னர் அந்த சொத்திற்கு தீர்வை ரசீது எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி நன்கொடை ஆவணத்தில் 13.04.2010 ம் தேதி முதல் சொத்தின் அனுபவத்தை வாதி வசம் ஒப்படைப்பதாக எனது தகப்பனார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த தேதியிலிருந்து மேற்படி சொத்து எனது சகோதரியின் அனுபவத்தில்தான் இருந்துவருகிறது என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் அவ்வாறு உள்ளது. மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய தனக்கு அதிகாரம் இல்லை என எனது தகப்பனார் அந்த ஆவணத்திலேயே குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஒரு பதிவு ஆவணத்தை தன்னிச்சையாக ரத்து செய்ய ஒரு நபருக்கு உரிமை கிடையாது என்றால் சரிதான். மேற்படி நன்கொடை ஆவணத்தை ரத்து செய்யப்போவதாக என் தகப்பனார் என் சகோதரிக்கு தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். அதற்கு என் சகோதரி ஒப்புக்கொண்டாரா என்றால் நாங்கள் பணம் கொடுப்பதாக சொன்னோம். அதன் அடிப்படையில் என் சகோதரிக்கு 4 லட்ச ரூபாய் பணம் கொடுத்து அதன் பின்னிட்டு மேற்படி நன்கொடை ஆவணம் என் தகப்பனாரால் ரத்து செய்யப்பட்டது. 4 லட்ச ரூபாய் பணம் கொடுத்த விவரம் எனது எதிர்வழக்குரை மற்றும் உறுதிக்கூற்றில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதிக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தில் என் அப்பா நல்ல உடல்நிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான்.

3) எனது அப்பா இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்தான் உடல்நிலை பாதிக்கப்பட்டார். அந்த காலக்கட்டத்தில் அவருக்கு கண் பார்வை குறைபாடு மற்றும் கை நடுக்கம் இருந்தது என்றால் சரிதான். எனது சகோதரிக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தில் தனது கடைசி காலத்தில் தன்னை பாதுகாத்து பராமரித்து வரவேண்டும் என்று என் தகப்பனார் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிக்கு எழுதிக்கொடுத்த

நன்கொடை ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரம் அப்போதே எங்களுக்கு தெரியும். வழக்கறிஞர் ராஜேஷ் என்பவர்தான் நன்கொடை ரத்து ஆவணத்தை தயார் செய்தார் என்றால் சரிதான். 2, 3, 4 பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் ரத்து ஆவணம் பதிவுசெய்யும்போது என் தகப்பனாருடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். அப்போது எனது தகப்பனாருக்கு பார்வை குறைபாடோ, கை நடுக்கமோ இல்லை, அவர் நல்ல உடல்நிலையில்தான் இருந்தார். நன்கொடை ரத்து ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. எனது சகோதரரான 3ம் பிரதிவாதிதான் நன்கொடை ரத்து ஆவணத்தில் 1ம் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். மற்றொரு சாட்சியான மாரியப்பன் என்னுடைய உறவினராவார். சாட்சிகளை நாங்கள்தான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். மேற்படி ரத்து ஆவணத்திற்கு விவரம் சொன்னது என்னுடைய தகப்பனார்தான். மேற்படி ரத்து ஆவணத்தை ஏற்படுத்தி கொடுக்க என்னுடைய தகப்பனாருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் வயோதிகம் இயலாமையை பயன்படுத்தி நன்கொடை ரத்து ஆவணத்தை நாங்கள் வலுக்கட்டாயமாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

4) நன்கொடை ரத்தாவதற்கு முன்பாகவே என் தகப்பனார் அந்த சொத்தை பொறுத்து உயில் எழுதிவிட்டார். அந்த உயிலானது நன்கொடை ரத்து செய்யப்பட்ட பின்னர்தான் பதிவுசெய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அதற்கு முன்னரே பதிவுசெய்யப்பட்டுவிட்டது. உயிலாவணம் ஏற்படுத்தப்பட்டபோது என் தகப்பனாருக்கு பார்வை குறைபாடும், கை நடுக்கமும் இருந்தது என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு தேவையான அனைத்து முன் ஆவணங்களையும் பத்திர எழுத்தரிடம் கொண்டுபோய் கொடுத்தது நான்தான். யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் என்பதை எழுத்துக்காரருக்கு நான்தான் சொன்னேன். அந்த விவரங்கள் அனைத்தையும் என் அப்பாவிடம் சொல்லி அதன்பின்னர்தான் அவர் கைரேகை செய்தார். 2, 3, 4

பிரதிவாதிகளுக்கு ஆதரவாக என் தகப்பனார் உயில் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி 3 உயில் ஆவணங்களிலும் 2, 3, 4 பிரதிவாதிகளாகிய நாங்கள்தான் மாற்றி மாற்றி சாட்சி கையொப்பமிட்டுக்கொண்டோம் என்றால் சரிதான். நன்கொடை ரத்து ஆவணத்தை தயார் செய்த அதே வழக்கறிஞர்தான் உயில் ஆவணத்தையும் தயார் செய்தார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் கையொப்பமிட மாரியப்பன் என்ற சாட்சியை நான்தான் அழைத்துசென்றேன். என்னுடைய தகப்பனார் பத்திர பதிவு அலுவலகத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்திருப்பார். அதற்கு 1 வாரத்திற்கு முன்னரே நாங்கள் உயில் ஆவணங்களை பத்திர எழுத்தரை பார்த்து எழுதி வாங்கிவிட்டோம். அப்படி தயார் செய்யப்பட்ட உயில் ஆவணங்களைத்தான் அன்றைய தேதியில் என் அப்பா பதிவுசெய்தார் என்றால் சரிதான். பத்திர அலுவலகத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட 3 உயில் ஆவணங்களை மீண்டும் நான்தான் பெற்றுவந்தேன் என்றால் சரிதான். மேற்படி 3 உயில் ஆவணங்களையும் என் தகப்பனாரை நிர்பந்தம் செய்து பதிவுசெய்தோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வாதிக்கு எழுதிவைத்த நன்கொடை ஆவண சொத்து அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவரது பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் கண்டுள்ள பல்வேறு சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது தகப்பனாரின் பெயரில் உள்ள கிரைய ஆவணங்களை நான் படித்துப்பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ. 4 ல் கண்டுள்ள சொத்து இவ்வழக்கு தபசிலில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கில் சம்பந்தமில்லாத சொத்து குறித்த ஆவணமான பி.வா.சா.ஆ 4 ன் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி இவ்வழக்கின் சொத்து எதுவும் கிரையம் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ. 6

கிரைய ஆவணத்திற்கும் தபசில் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவண எண்ணில் முதல் பக்கத்திற்கும் அடுத்த பக்கத்திற்கும் மாறுபாடு காணப்படுவதால் அது ஒரு தவறான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

6) என் தகப்பனாருக்குரிய சொத்துக்களின் மதிப்பு கோடிக்கணக்கில் இருக்கும் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை நான் பிறப்பதற்கு முன்பிருந்தே என் தகப்பனார்தான் அனுபவித்துவந்தார் என்றால் சரிதான், அதற்கு முன்னர் அவருடைய முன்னோர்கள் அனுபவம் செய்துவந்தார்கள். அவை பூர்வீகமாக கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 3 உயில் ஆவணங்களும் சட்டப்படி செல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நன்கொடை ரத்து ஆவணமும் உயில் போல எனது தகப்பனாரை நிர்பந்தப்படுத்தி ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே நன்கொடை ரத்து ஆவணமும் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களில் என் சகோதரிக்கு பங்கு உண்டு என்றால் சரிதான், அவருக்கு உரிய பாகம் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் ஆவணங்கள் பிறப்பிக்கப்பட்ட காலம் என் தகப்பனார் உடல் நலம் பாதிக்கப்பட்டு படுத்தப்படுக்கையாக இருந்த காலம் என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தை பொறுத்து என் தகப்பனார் வாதிக்கு பதிவு நன்கொடை ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ள காரணத்தினால் வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. உயில் ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள காரணத்தினால் அதன் அடிப்படையில் எங்களுக்கு எந்த சொத்தும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2010 க்கு பின்னர் 1ம் தபசில் சொத்தை பொறுத்து என் அப்பாவின் பெயருக்கு தீர்வை ரசீதுகள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்களின் பட்டாவானது என் அப்பாவின் பெயருக்கு குடும்பத்தின் கர்த்தா என்ற நிலையில் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனவே வாதி கோரிய பரிகாரம் அவருக்கு

**கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi